வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்: 3901/ஆ4/ 2023, நாள் 22.09.2023

– – –

பொருள் : பள்ளிக்கல்வி –2023–2024 நான் முதல்வன் – பள்ளியளவிலான உயர்கல்வி வழிகாட்டி மையம் (Carreer Guidance Cell) –மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு வருகை தந்த நாள்களுக்கு ஆறு நாள்களுக்கு மிகாமல் ஈடு செய்யும் விடுப்பு வழங்குதல் –சார்பு

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.41582/டபிள்யு2/இ2/2023 நாள். 22.09.2023

=========

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி,வேலூர் மாவட்டத்கில் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல்,ஆலோசனைக்குழு (Career Guidance Cell) 06.05.2023 முதல் செயல்பட்டு பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான பின்னர், உயர்கல்வி சார்ந்த தகவல்கள்,விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல், கல்லூரிக் கட்டண ஏற்பாடுகள் என பல்வேறு உதவிகளை பள்ளிகளின் வாயிலாக செய்திட அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் 08.05.2023 முதல் 2 ஆசிரியர்கள் சுழற்சி முறையில் விடுமுறை நாள்களில் பள்ளிகளுக்கு வருகை புரிந்த முதுகலை ஆசிரியர்களுக்கு, அவர்கள் கோடை விடுமுறையில் பணிபுரிந்த நாள்களுக்கு மட்டும்,அதிகபட்சமாக ஆறு நாள்களுக்கு மட்டும் ஈடு செய்யும் விடுப்பு அனுமதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்விடுப்பினை மொத்தமாக எடுக்காமல் அவ்வப்போது ஒரு நாள் வீதம், விதிகளின் படி 6 மாத கால அவகாசத்திற்குள் எடுக்க வேண்டுமென்றும் இது சார்ந்த ஈடு செய் விடுப்பு ஏற்கனவே துய்க்கப்பட்டிருந்தால் அவ்விடுப்பு போக மீதமுள்ள நாள்களுக்கு மட்டும் விடுப்பு வழங்க அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வை கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர் ,
வேலூர் .

பெறுநர் ,

அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்/ தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.